## முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

## O.S.No.339/2022

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | மார்க்கபந்து |
| தகப்பனார் / கணவர் | .. | சீனிவாசன் |
| வயது | .. | 62 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | செய்யாறு |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் நாள் புதன்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

வழக்கில் வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். தாவா சொத்தின் மின் கட்டண அட்டையின் நகல் வா.சா.ஆ.1, 18.01.2019 தேதியிட்ட இருப்பிடச்சான்றின் நகல் வா.சா.ஆ.2, வாதியின் ஆதார் அட்டையின் நகல் வா.சா.ஆ.3, வாதியின் குடும்ப அட்டையின் நகல் வா.சா.ஆ.4, வாதியின் வாக்காளர் அடையாள அட்டையின் நகல் வா.சா.ஆ.5, தாவா சொத்திற்கு வருவாய்த்துறையினரால் 1993 ல் வழங்கப்பட்ட புலவரைபடத்தின் நகல் வா.சா.ஆ.6, 21.02.2015 ம் தேதியிட்டு 1990–1991 ஆண்டிற்கான டவுன் சர்வேயின் புலவரைபடத்தின் நகல் வா.சா.ஆ.7, தாவா சொத்தின் அ பதிவேட்டின் நகல் வா.சா.ஆ.8, மின்னிணைப்பு பெறுவதற்காக தாவா சொத்திற்கு வட்டாட்சியரால் வழங்கப்பட்ட தடையில்லா சான்று நகல்

வா.சா.ஆ.9, அ.வ.எண்.179/2011 வழக்கின் நகல் வா.சா.ஆ.10, அ.வ.எண்.179/2011 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் நகல் வா.சா.ஆ.11, மேல்முறையீட்டு மனு A.S.No.38/2017 ன் நகல் வா.சா.ஆ.12, செய்யாறு, காவல்துறை ஆய்வாளர் அவர்களிடம் வழங்கப்பட்ட 22.10.2020 ம் தேதியிட்ட புகார் மனுவின் நகல் வா.சா.ஆ.13, செய்யாறு, நடுவர் நீதிமன்ற வழக்கு எண். CC.No.120/2022 ன் நகல் வா.சா.ஆ.14, செய்யாறு, காவல்நிலைய குற்ற எண்.263/2022 முதல் தகவல் அறிக்கையின் நகல் வா.சா.ஆ.15, செய்யாறு, காவல்நிலைய குற்ற எண்.262/2022 முதல் தகவல் அறிக்கையின் நகல் வா.சா.ஆ.16 ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**